சுய மரியாதை அற்றவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற கருத்து தொனிக்கும்படியாக இருப்பதால், சுய மரியாதைத் திருமணங்கள் என்று சொல்லுவதைப் புதிய முறைத் திருமணம் என்று சொல்லுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு பெயரை வைத்துக் கொள்ளுவதி ஞல் மற்றவர்கள் பாதிக்கப்படுகிருர்கள் என்று சொல்லுவது சரியல்ல.

திரு. ர. ஜீவரத்னம் : வைதீக முறைப்படி நடைபெறக் கூடிய கல்யா ணங்கள் ஏராளமாக நடக்கிறபடியால், இடங்களுக்கு கிராக்கி இருப்பதிஞலே, சர்க்கார் செலவிலே நகரத்திற்கு ஒரு கல்யாண மண்டபம் கட்டிக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நகர மன்றமே கல்யாண மண்டபம் கட்டுகிறது. பல தேவஸ்தானங்களும் கல்யாண மண்டபம் கட்ட வேண்டு மென்று நான் சொல்லி வருகிறேன். அவ்வாறு கட்டிக்கொண்டும் வரு கிருர்கள். கோவில்களிலே திருமணம் நடத்திஞல் சிக்கனமாக நடத்த லாம். அவ்வாறு பல திருமணங்கள் நடைபெறுகின்றன.

திரு. சி. பொன்னுசாமி : விவாகரத்து செய்துகொள்ளுவதற்கு ஆண் களுக்கு உரிமை இருப்பது போல், பெண்களுக்கும் உரிமை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இருசாராருக்கும் உரிமை உண்டு. சட்டப்படி அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

* * *

Elementary Schools (Teacher-pupil ratio)

* 245 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to reduce the present teacher-pupil ratio of 1 : 40 in Elementary Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Certain representations have been received in the matter and they are under the consideration of Government.

திரு. வை. சங்கரன் : இப்பொழுதுள்ள விகிதாசாரம் 1 : 35 என்று அறிகிறேன். ஆனுல் 70 மாணவர்கள் வரையிலும் ஒரு உபாத்தியாயர் தான் போடுகிருர்கள். 70-க்கு மேல் போனுல் தான் 2 உபாத்தியாயர்கள் போடுகிருர்கள். 35-க்கு மேல் போனுல் 2 உபாத்தியாயர்கள் போடுவ தற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்த்வத்சலம் : இதைப் பற்றி விவாதத்தில் விடை அளிக்கும்பொழுதுகூடச் சொன்னேன். 1 : 35 என்ற விகிதாசாரம் வகுப் பைப் பொறுத்தது மாத்திரமல்ல. பஞ்சாயத்து யூனியனை ஒரு யூனிட்டாக வைத்துக்கொண்டு, "ஓவராலாக" 35-க்கு மேல் போகக் கூடாது. கல்வி இலாகா இயக்குநர் இதைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்பது இப்பொழுதுள்ள உத்தரவு.

திரு. கி. இரா. சம்மந்தம் : இந்த ஓவரால் ஆக 35 என்ற விகிதம் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு விதித்து அனுப்பப்பட்டிருக்கிற உத்தரவு ஏற்கெனவே உள்ள ஸ்லாப் மாதிரி இல்லை என்று சொல்லு கிருர்கள். ஏற்கெனவே 1 முதல் 35 மாணவர்கள் வரை ஒரு ஆசிரியரும், 36-க்கு மேல் 70 வரை 2 ஆசிரியரும், 71-க்கு மேல் 105 வரை 3 ஆசிரி யர்கள் என்று இருந்தது. அந்த ஸ்லாப் முறை இப்பொழுது அனுஷ்டிக் கப்பட்டு வருகிறதா ?

---

* **Expunged as ordered by the Chair.**

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓவரால் முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். நான் நேற்று பேசும்பொழுது மாவட்டத்திற்கான ஓவரால் ஆவரேஜ் 35-க்கு மேற்பட்டிருந்தாலும் திருப்தி அடையலாமென்று கூறினேன். அதற்குட்பட்டு கல்வித் துறை அதிகாரிகள் வேண்டியதைச் செய்வார்கள்.

திரு. எஸ். மாதவன் : ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் காரணம் காட்டி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், குறிப்பாக சிறு கிராமங்களில் பல வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த மாதிரி தவறுகள் நடைபெற்றால் கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

Deposits (refund)

* 246 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that inordinate delay is being caused in the matter of refund of deposits; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The Government are not aware of any inordinate delays in sanctioning refunds of contributions deposited towards building works under the Local Development Works Programme. If specific instances of inordinate delays are brought to the notice of Government, they will be looked into and the situation remedied.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : தர்மபுரி மாவட்டத்தில் காரிய மங்கலம் பெண்ணுகரம் போன்ற இடங்களில்

Mr. SPEAKER: If any specific case is brought to the notice of the Government, it will be looked into.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரீபண்டுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் சரியாக அந்த மனு பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தாமதம் ஏற்படும். மேலும், ரீபண்டு காலாவதியாகி விட்டால், அதற்கு ஒரு ப்ரொஸீஜர் இருக்கிறது. அதன்படி அரசாங்கத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

Evening colleges

* 247 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI RAMA ARANGANNAL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open evening colleges; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.